| Special Quota if any | |
|---|---|

பதிவு அஞ்சல் ஒப்புகையுடன்:-
ந.க.எண்.அ2/20000/2020
நாள்:08.03.2022

மாவட்ட காவல் அலுவலகம்,
தஞ்சாவூர்.

## பணி நியமன ஆணை

பொருள்: காவல் - 2020-ம் ஆண்டு இரண்டாம் நிலை பெண் காவலராக மாவட்ட ஆயுதப்படையில் பணிநியமனம் செய்தல் - பணியமர்த்தல் ஆணை - வழங்கப்படுகிறது.

-------

திரு/செல்வி/திருமதி பா.ருபா, த/பெ. பாஸ்கர் திரு. ஆகிய நீவிர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு மையத்தால் நடத்தப்பட்ட 2020-ம் ஆண்டுக்கான காவலர் தேர்வு மற்றும் காவல் விசாரணை மற்றும் மருத்துவ பரிசோதனை ஆகியவற்றில் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட ஆயுதப்படையில் இரண்டாம் நிலை பெண் காவலராக பணியமர்த்தப்படுகிறீர்.

2. நீவிர் பதவிக்குறிய அடிப்படை பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது கல்வி, வயது, ஜாதி ஆகியவற்றின் மூல சான்றிதழ்கள் மற்றும் இதர சான்றிதழ்கள் ஆகியவற்றைச் சம்மந்தப்பட்ட தற்காலிக காவல் பயிற்சிப் பள்ளி முதல்வரிடம் ஒப்படைத்து, அவர்கள் முன்னர் நீவிர் அளித்துள்ள நிழற்பட நகல்களுடன் ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். இந்தப் பணி நியமனத்திற்காக நீவிர் ஏற்கனவே ஒப்படைத்தச் சான்றுகள் தவறானவை எனத் தெரிய வந்தாலோ அல்லது குற்ற வழக்கில் தொடர்புடையதாக இருந்தாலோ, அல்லது குற்ற வழக்கு தொடர்புடைய விவரங்களை மறைத்து காவல் புலனாய்வு அறிக்கையை பூர்த்தி செய்து அதன் பின்னர் கண்டறியப்பட்டாலோ, இந்த பணியமர்த்தல் ஆணை உடனடியாக நீக்கம் செய்யப்படும் என்பதை அறியவும். காவல் பயிற்சியின் போது உமக்கு ருபாய் 18200-57900 என்ற சம்பள ஊதிய நிலையில் ஊதியமும் மற்றும் நடைமுறையில் உள்ள இதர படிகளும் வழங்கப்படும்.

3. இந்த பதவியில் நீவிர் மூன்று ஆண்டு காலத் தொடர் பணியில், இரண்டு வருட காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவீர். இந்தத் தகுதிகாண் பருவத்தில், உமது பணி நிறைவானதாக இல்லையெனில், பதவி நீக்கம் செய்யபடுவீர்.

4. அரசு ஆணை பல்வகை எண்.206 உள்(கா.3), துறை நாள்:07.03.2012-ன்படி நீவிர் ஏழு மாத காலம் பயிற்சி பள்ளியில் உறைவிடப் பயிற்சியும், ஒரு மாத காலம் மாவட்டம்/நகரத்தில் நடைமுறை பயிற்சியும் ஆக எட்டு மாத காலம் அடிப்படை பயிற்சிப் பெற வேண்டும். இவை தவிர, சிறப்புக் காவல்/ சேமநலப்படை ஆகியப் பிரிவுகளில் பணிபுரிந்து வட்டக் காவல் பிரிவு மாற்றலுக்கு முன் ஒரு மாத கால அறிமுக பயிற்சி (Pre-induction course) காவல் பயிற்சிப் பள்ளியில் பெறவேண்டும். பயிற்சிக் காலத்தில் உமது நடத்தை, நல்லொழுக்கம் மற்றும் பயிற்சியை மேற்கொள்ளும் திறன் ஆகியவை மீது ஏதேனும் கவனமின்மை, பற்றாக்குறை தென்படின் பதவி நீக்கம் செய்யப்படுவீர்.

5. மேலும் நீவிர் காவல் பணி தொடர்பு காரணமாக தமிழ்நாட்டின் எந்த மாவட்டத்திலும், காவல்துறையின் எந்த அணி மற்றும் பிரிவிலும் தேவை ஏற்படின் பிற மாநிலங்களிலும் பணி செய்ய வேண்டும் என்ற வரையறையுடன் தேர்வு செய்யப்பட்டுள்ளீர் என்பதும் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான இசைவு கடிதம் பயிற்சியில் சேர்ந்த உடன் உம்மால் பூர்த்தி செய்து பயிற்சிப்பள்ளி முதல்வரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

6. உமக்கு அடிப்படை பயிற்சி **14.03.2022** அன்று முற்பகல் முதல் தொடங்கப்படவுள்ளது. எனவே இது தொடர்பாக சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் காவல் நடைமுறைகளுக்காக நீவிர், **13.03.2022 அன்று காலை 10.00 மணிக்கு திருச்சி மாவட்ட** காவல் பயிற்சிப்பள்ளியில் (அண்ணா நகர்) அறிக்கை செய்ய வேண்டும். பயிற்சிக்குறிய சீருடைகள் பயிற்சிப் பள்ளியில் உமக்கு வழங்கப்படும். குறிப்பிட்ட தேதியில் நீவிர் பயிற்சிக்கு அறிக்கை செய்யாவிடில், உமது தேர்வு ரத்து செய்யப்படும் என்பதை அறியவும். நீவிர் அரசு / பொதுத்துறை / தனியார் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தால், அப்பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கான ஆணை அல்லது பணிவிலகல் ஏற்பு ஆணையினைப் பயிற்சிக்கு ஆஜராகும் போது அளிக்க வேண்டும்.

7. நீவிர், பயிற்சிக்கு அறிக்கை செய்யும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள பொருட்கள் மற்றும் முன்பணத் தொகை ஆகியவற்றை உடன் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்படுகிறீர். பயிற்சியில் சேருவதற்காக, பயணப்படி மற்றும் தினப்படி ஏதுவும் வழங்கப்படமாட்டாது.

8. நீவிர், அல்லது தங்கள் குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் கொரானா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு இருந்தாலோ அல்லது கொரானா நோய் தொற்றால் பாதிக்கப்பட்டு இருக்கலாம் என கருதப்பட்டு இருந்தாலோ இது குறித்து நோய் தொற்று ஏதும் இல்லை என்ற மருத்துவ சான்று உரிய அரசு மருத்துவரிடமிருந்து பெற்று சமர்பித்த பின்புதான், தாங்கள் பயிற்சிக்கு அறிக்கை செய்ய அனுமதிக்கப்படுவீர் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பயிற்சியில் சேரும்போது கொண்டு வரவேண்டியவற்றின் விவரப்பட்டியல்.

காவல் கண்காணிப்பாளர்,
தஞ்சாவூர்.

பெறுநர்

**Regn. No. 7500489**
Thiru / Tmt / Selvi. ROOPA B
S/O BASKARR
DOOR NO. 41/2 NORTH STREET, KOVANOUR ,
KOTHANGUDI POST, KUMBAKONAM TALUK,
Thanjavur, Tamil Nadu - 612602